1973 மார்ச் 14]

*Diamond Crown for Goddess **Meenakshi**, **Madurai**.*

*370 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a New Diamond Crown has been provided for Goddess Meenakshi Amman at Madurai; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) ரூ. 14 லட்சம் மதிப்புள்ள வைரக் கிரீடம் ஒன்று திருப்பணிக் குழுவினராலும், ரூ. 2 லட்சம் மதிப்புள்ள தங்கக் கவசம் ஒன்று மதுரை மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழுவாலும், பொது மக்களிடமிருந்தும், கோயிலிலிருந்தும் வசூலான நன்கொடையால் செய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன வேலைகள் முடிவடைந்து அவ்வாபரணங்கள் தெய்வத்திற்கு 11—12—1972 அன்று அணிவிக்கப்பட்டன.

திரு ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பெரிய கோயில்களிலேயெல்லாம் வருமானத்தைச் சேர்த்து ஒரே இடத்திலே குவித்துக்கொள்கின்ற அந்த முறையை மாற்றி, அனாதை விடுதி, கல்லூரி, மருத்துவமனை போன்றவற்றிற்கு ஸ்ரீரங்கம், ஸ்ரீபெரும்புதூர் கோவில் வருமானத்திலிருந்து நிதியை ஒதுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்த வைரக்கிரீடம், கவசம் செய்தது கோவில் வருமானத்திலிருந்து செய்யவில்லை. தனிப்பட்ட முறையிலே பக்தர்கள் கொடுத்த காணிக்கையிலிருந்து செய்து இருக்கிறார்கள். செய்தது போக மீதியிருந்தால் மற்றக் காரியங்களுக்குச் செய்கிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குச் செல்கின்றவர்கள், வைரக் கிரீடத்தையும், வைர மூக்குத்தியையும், வைரத் தோடையும் பார்த்துவிட்டு, அதைப்போன்று நமக்குக் கிடைக்கவில்லையே என்று நினைத்துக்கொண்டு கோவிலிலிருந்து வீட்டிற்குச் சென்றவுடன் வீட்டிலே சண்டைபோடுகிறார்கள். எனவே, ஆண்டவனுக்கு இதுபோன்ற அணிகலன்கள் போடுவதை நிறுத்துவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களின் துணைவியாரை மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு அனுப்பாமல் இருப்பது நல்லது.

திரு. எ. எம். இராஜா: தலைவர் அவர்களே, ஆண்டவன் ஆசைகளுக்கு அப்பாற்பட்டவர் என்று கூறப்படுகிறது நாத்திகர்களால்..........